**தலைப்பு 247 – இலங்கை சுங்கம் தொடர்பான கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை – 2017 ஆம் ஆண்டு**

------------------------------------------------------------------------------------ ------------------------------------------------------------

2017 ஆம் ஆண்டு 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்ட 2016 ஆம் ஆண்டு 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தில் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்டுள்ள தலைப்பு மற்றும் விடய இலக்கத்திற்கமைவாக ஒதுக்கீட்டுக் கணக்கு, கணக்கிணக்கக் கூற்று மற்றும் வருடாந்த வரவு செலவு திட்டத்தின் 3.1.1, 3.1.2 மற்றும் 3.1.3 ஆகிய அட்டவணைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள வருமான குறியீடுகளுக்கு ஏற்புடையதாக 17 வருமானக் கணக்குகளை, இலங்கை சுங்கம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டது. அந்தக் கணக்குகளிலும் கணக்கிணக்கக் கூற்றுகளிலும் வெளிப்படுத்தும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றுகை என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரை பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர், கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் அரசிறை கணக்கீட்டு உத்தியோகத்தர் ஆகியோரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்கீட்டு நெறிமுறை தொடர்பான பொறுப்பு**

------------------------------------------------------------------------------------------------------------------------

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிக் கோவையில் நிதி ஒழுங்குவிதி 124 இன் பிரகாரம் அரசிறை சேர்த்தலும், அரசாங்கத்தின் பிற பணங்களைச் சேர்த்தலும் மற்றும் அரசாங்கத்தின் எல்லா நிதி நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் தொடர்பான பொது கண்காணிப்பும் நிதி அமைச்சரின் பொறுப்பாகும். ஆகவே அவரால் அந்த பொறுப்பினை நிறைவேற்றும் பொருட்டு நிதி ஒழுங்குவிதிகள் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களை நியமனம் செய்யப்பட்டுள்ளது. நிதி ஒழுங்குவிதி 125(1)(அ) இன் பிரகாரம் திணைக்களத்து தலைவர் தமது திணைக்களத்தின் சகல விதமான நிதிக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோத்தராவதுடன், அரசிறைக் கணக்கீட்டு உத்தியோகத்தரை திறைசேரியால் நியமனம் செய்யப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைக்குள் தமது கடமைப்பொறுப்புகளை நிறைவேற்றப்பட்டு சமர்ப்பிக்கப்படும் கணக்கீடுகள் மற்றும் கணக்கிணக்க கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகளும், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் நிருவாக ஒழுங்குவிதிகளுக்கமைவாக பேணிச் செல்லுதல், தயாரித்தல், நியாயமான வகையில் சமர்ப்பிப்பதற்கு ஏற்புடையதான உள்ளக கட்டுப்பாடுகளை திட்டமிடல், நடைமுறைப்படுத்தல் மற்றும் அவற்றை பேணதலும் இந்த பொறுப்புகளுள் உள்ளடங்கும்.

## 1.3 கணக்காய்வு விடயவெல்லை

தலைப்பு 247– இலங்கை சுங்கத்தின் 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றுகை தொடர்பில் திட்டமிடல், அரச செலவுகள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வளங்களை முகாமைத்துவம் செய்தல், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளை பயன்படுத்தல், சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு ஒழுங்கமைதல், புத்தகங்கள், ஆவணங்கள், அறிக்கைகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுகளை இற்றைப்படுத்தி பேணுதல், கணக்குகளை தயாரித்து காலத்திற்கேற்றவாறு சமர்ப்பித்தல், செயலாற்றுகை சுட்டிகளை அடிப்படையாகக்கொண்டு சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் செயலாற்றுகை அறிக்கைகளை வழங்குதல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசில் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளின்கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மீளாய்விற்கான ஆண்டில் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை உரிய காலத்தில் இலங்கை சுங்கத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் வழங்கப்படும். கணக்கீடுகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுகள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள், கணக்காய்விற்கு சமர்ப்பித்த திட்டமிடல், கணக்கீடுகள், கணக்கிணக்கக் கூற்றுகள் மற்றும் செயலாற்றுகை அறிக்கைகள் பற்றிய மீளாய்வுகள் அத்துடன் கொடுக்கல்வாங்கல்களில் மாதிரிகள் தொடர்பான உறுதிப்பாடுகள் பரிசோதனைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன. அந்த மீளாய்வு, பரிசோதனைகளின் விடயவெல்லை மற்றும் போதியளவு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள அலுவலக பதவியணி, ஏனைய வளங்கள், கால அவகாசம் போன்ற எல்லைகளுக்குள் இயன்றவரை விரிவான கணக்காய்வை மேற்கொள்ள முடியுமானவாறு தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்பு

2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்காக இலங்கை சுங்கத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் வெளிப்படுத்திக்கொண்ட கணக்காய்வு அவதானிப்புகளில் போதியளவு மற்றும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகளை, இவ்வறிக்கையில் 2.1 பந்தியிலிருந்து 2.20 வரையிலான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. நிதி நிருவாகத்தில் போதியளவினை உறுதிப்படுத்தும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதி கோவையில் 128 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை நிறைவேற்றும்போது வெளிப்படுத்திக்கொண்ட, பின்வரும் குறிப்பில் சாரம்சப்படுத்தி காட்டப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புகளுக்கமைவாக கணக்கீட்டு உத்தியோகத்தராகவும் அரசிறை கணக்கீட்டு உத்தியோகத்தராகவும் தமது கணக்கீட்டு நெறிமுறைகளை திருப்திகரமாக நிறைவேற்றியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| நிதி ஒழுங்குவிதி 128 (1) பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்கீட்டு நெறிமுறை | | கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் அரசிறை கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாமை | அவதானிப்பு உள்ளடக்கிய அறிக்கையில் பந்தி தொடர் |
|---|---|---|---|
| <u>நித ஒழுங்குவிதி</u> | | | |
| 128 (1)(அ) | அனுமதித்த முயற்சிகளுக்கு நிதி ஏற்பாடு அளிக்கையில் பாராளுமன்றத்துக்கு இருந்த எண்ணங்களுக்கும் அரசாங்க கொள்கைக்கும் மதிப்புக் கொடுத்து அவரின் திணைக்கள வேலைகள் திட்டமிடப்பட்டு உரிய காலத்தில் நிறைவேற்றப்படுகின்றன எனவும், அவ்வாண்டுக்கென | 1. செயற்றிட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்களை உள்ளடக்கப்படாமை<br>2. கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றப்படாமை<br>3. நிலைபேறுடனான அபிவிருத்தி<br>4. பாராளுமன்றத்தால் ஏற்பாடு | 2.1.1<br>2.1.2<br>2.2<br>2.7 |

| | | | |
|---|---|---|---|
| | விதிக்கப்பட்டுள்ள வேலைத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கும் அல்லது குறிப்பிட்டுள்ள இலக்கை எய்துவதற்கும் அல்லது இவ்விரண்டிற்கும் முயற்சி செய்யப்படுகின்றதெனவும், | செய்திருந்த ஒதுக்கீடுகளின் உபயோகம் | |
| 128(1)(M) | தனது திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்கும் கணக்கீட்டு முறைக்குமுள்ள ஒழுங்குகள் திறம்படவுள்ளனவெனவும், தேவைப்படும்போது அவை அரசாங்க வருமதிகளையும், வருமதிகளை ஒழுங்காக, முற்றாக உடனடியாகச் சேகரித்தலையும்,பெற்ற பணங்களுக்கு கணக்கு வைத்தலையும், அரசாங்கத்தின் சார்பில் செலவுகளை அனுமதித்தலையும் ஆற்றப்படும் சேவைகளையும் வழங்கு பொருட்களையும் மேற்பார்வை செய்து அவற்றை பரிசோதித்தலையும் அவற்றுக்கு அரசாங்க நிதியிலிருந்து உடனடியாகச் சரியாகக் கொடுப்பனவு செய்தலையும் சரிவர உறுதிப்படுத்தலுக்கும் போதியளவு ஏற்பாடு செய்யப்படுகின்றன எனவும் | 1. பெறுகை நடைமுறைமூலம் வழங்கல் மற்றும் சேவைகள் என்பவற்றை பெற்றுக்கொள்வதில் குறைப்பாடுகள்<br>2. முகாமைத்துவ குறைப்பாடுகள்<br>3. கேள்விகளுக்கான வைப்பு மீதிகளை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு இயலாமை<br>4. விமானங்கள்மூலம் கொண்டு வரப்படும் பொருட்களின் பொருட்டு அறவிடப்படும் வைப்புகள் தொடர்பிலான குறைப்பாடுகள்<br>5. கைப்பற்றுகின்ற அரச உடமையாக்கும் பொருட்களுக்கு வழங்கியிருந்த முற்பணம் தீர்க்கப்படாமை<br>6. கணக்காய்வு சாட்சிகள் அளிக்காமை | 2.3<br>2.6<br>2.12(அ)<br>2.13<br>2.14<br>2.18 |
| 128(1)(இ) | அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகளையும் பிற குறைநிரப்பு அறிவுறுத்துரைகளையும் தனது திணைக்களம் கடைபிடிக்கின்றதெனவும், தேவையான விடயத்தில் அவை திணைக்கள அறிவுறுத்துரைகளால் குறைநிரப்பப்படுகின்றனவெனவும் | 1. கட்டுநிதி மீதியை தீர்ப்பதில் தாமதம்<br>2. ஆவணங்கள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை<br>3. சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுடன் இணங்காமை<br>4. வரி தேவைகளுக்கு ஏற்புடையாமை | 2.15<br>2.17<br>2.19.1<br>2.19.2 |
| 128(1)(<) | பெறுகை, கொடுப்பனவு அத்துடன் மற்றும் விடயங்கள் பற்றி போதிய உள்ளகக் கண்காணிப்பு பேணப்படுவதுடன், காலத்துக்குக் காலம் பரிசீலிக்கப்படுகின்றதெனவும் | 1. முற்பணக் கணக்கில் மீதி ஒப்பிடப்படாமை<br>2. கட்டுநிதி கணக்கில் மீதி ஒப்பிடப்படாமை<br>3. பொது வைப்பு மீதி ஒப்பிடப்படாமை<br>4. வங்கி கணக்குகளை வழிநடாத்துவதில் குறைப்பாடுகள் | 2.9(அ)<br>2.10<br>2.11<br>2.16 |
| 128(1)(உ) | அரசாங்கத்துக்குச் சொந்தமான அல்லது அதன் கட்டுக்காப்பிலுள்ள பணம், பண்டங்கள், சாதனங்கள் பிற சொத்துக்கள் ஆகியவற்றைப் பாதுகாத்துப் பேணுவதற்கு போதியளவிலும் முறையாகவும் | 1. சொத்துக்கள் பதிவேட்டுக்குட்ப - டுத்துவதில் குறைப்பாடுகள்<br>2. அரசாங்கத்திற்குரிய சொத்துகளை ஆகக்கூடிய வினைத்திறனுடன் உபயோகப்படுத்தாமை | 2.4 (அ)<br>2.4.(ஆ) |

| | | | |
|---|---|---|---|
| | ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றனவெனவும், இவை காலத்துக்குக் காலம் சரிபார்க்கப்படுகின்றனவெனவும், இவை தீர்வு செய்யப்படும்போது அத்தகைய தீர்வு செய்தல் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் இணங்கவுள்ளனவெனவும் | 3 சொத்துக்களின்ன பாதுகாப்பினை உறுதிப்படுத்தப்படாமை<br>4 வாகன உபயோகத்தின் குறைப்பாடுகள் | 2.4 (இ)<br>2.4 (ஈ) |
| 128(1) (ஏ) | நிலுவையாகவுள்ள வருமதிகளை அறவிடுவதற்கு விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளனவெனவும், அத்தகைய வேலைக்கென ஒதுக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் நிலுவைகள் சம்பந்தமாகவும் அவைகளை விரைவில் அறவிடுவதற்கு எடுத்த நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் காலாண்டுக்கொருமுறையாவது அல்லது வேறு வழியில் பணிக்கப்பட்டவாறு தனக்கு அறிவிக்கின்றார்கள் எனவும், | 1. நிலுவை கடன் மீதி அறவிடப்படாமை | 2.9(அ) |
| 128(1) (ஐ) | அரசாங்க அலுவல்களின் கொடுக்கல்வாங்கலில் எதிர்பார்க்கப்படும் சிக்கனம், திறமை, ஒழுக்கமுடமை, நேர்மை ஆகியவற்றிற்கு உரிய மதிப்புக் கொடுத்துத் தனது திணைக்கள முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றனவெனவும் | மனித வளங்கள் முகாமைத்துவத்தின் குறைப்பாடுகள் | 2.20 |
| 128 (1) ஒ | எந்த ஒரு செலவு அல்லது பொறுப்பேனும் தனது வாக்குப்பணம் அல்லது பிற அனுமதித்த நிதி ஏற்பாடு ஆகியவற்றின் எல்லைக்குட்பட்டதெனவும். அது போதியளவு அதிகாரத்தைப் பெற்றுள்ளதெனவும், | ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீட்டு எல்லையை கடந்து பொறுப்புகளை மேற்கொள்ளுதல். | 2.5 |

நிதி ஒழுங்குவிதி 128(2) பிரகாரம் அரசிறை கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்கீட்டு நெறிமுறை

| | | | |
|---|---|---|---|
| 128(2)(அ) | வருமானக் குறியீட்டுக்கு ஏற்புடையதான வருமான மதிப்பீடுகளை முற்று முழுதாகவும், இயன்றவரை சரியாகவும் தயாரித்தல் | மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் உண்மையான வருமானம் என்பவற்றுக்கிடையில் போதியளவு ஏற்றத்தாழ்வுகள் காணப்படுதல் | 2.8.1 |
| 128(2) (உ) | நிலுவையாகவுள்ள அரசிறையை விரைவில் சேகரிப்பதன் பொருட்டு கணக்கீட்டு உத்தியோகத்தர்களுடனும் அவற்றை சேகரிப்பதற்குரிய திணைக்களங்களுடனும் ஆலோசித்து விசேட ஒழுங்குகள் செய்யப்படுகின்றன எனவும். | 1. நிலுவை வருமானம்<br>2. வருமானம் இழக்கப்படுதல்<br>3. வருமானம் கைவிடப்படல்<br>4. வருமானம் சேகரிப்பதன் செயலாற்றுகை | 2.8.2<br>2.8.3<br>2.8.4<br>2.8.5 |

## 2. போதியளவிலானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 2.1 செயலாற்றுகை

#### 2.1.1 திட்டமிடல்

2014 ஆம் ஆண்டு பெப்ருவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கையில் 03 ஆவது பந்தி பிரகாரம் வருடாந்த செயற்றிட்டத்தில் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட வேண்டுமாயினும். இலங்கை சுங்கத்தால் தயாரிக்கப்பட்ட செயற்றிட்டத்தில் குறித்த விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்புடையதாக இற்றைப்படுத்திய நிறுவனத்தின் அமைப்புக் கட்டமைவு, அங்கீகரிக்கப்பட்ட பணியாற்றொகுதி மற்றும் தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள பணியாற்றொகுதி தொடர்பான விபரங்கள்

(அ) வருடாந்த வரவு செலவு மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்ட முதன்மை அடிப்படையில் தயாரிக்கப்பட்ட செயற்றிட்டம் (Activity Plan), செயற்படுத்திய கால அட்டவணை (Time Line) மற்றும் அந்த செயற்பாடுகளில் எதிர் பார்க்கப்பட்ட விளைவளவுகள்/ ஆக்க அளவு (Output/ Outcome)

(இ) வருமானம் சேகரிப்பதன் செயற்றிட்டம்

(ஈ) கட்டுநிதி தேவைகளின் திட்டம் (Imprest Requirement Plan)

(உ) வருடாந்த பெறுகை திட்டம் (Annual Procurement Plan)

(ஊ) உள்ளக கணக்காய்வு திட்டம் (Internal Audit Plan)

## 2.1.2 கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றப்படாமை

-----------------------------------------------------------------

வருடாந்த செயற்றிட்டம்படி இலங்கை சுங்கத்தின் வழங்கல் பிரிவினால் 37 பிரதான அலுவல்கள் நிறைவேற்ற வேண்டி இருந்தன. அந்தப் அலுவல்களுக்கிடையில் மொத்தம் ரூபா.35 மில்லியன் ஒதுக்கீடு ஏற்பாடு செய்திருந்த 05 அலுவல்களை நிறைவேற்றப்படவில்லை. அந்த அலுவல்களை நிறைவேற்றப்படாமையால் பின் குறிப்பிடப்படும் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை அடைந்து கொள்வதற்கு முடியவில்லை.

(அ) செயற்றிட்டம் படி ஆய்வுகூட உபகரணங்களை பெற்றுக்கொள்வதற்கு ரூபா.10 மில்லியன் ஒதுக்கீடு ஏற்பாடு செய்திருப்பினும், அந்த ஒதுக்கீடுகளை உபயோகப்படுத்தாமையால் அதிக தரத்துடன்கூடிய பரிசோதனைகளின் பெறுபேறுகளை அடைந்துக் கொள்வதற்கு இயலாதுள்ளது.

(ஆ) செயற்றிட்டம்படி சேவை வழங்கல் பிரிவு, களஞ்சிய தொகுதி, செய்தித் தொடர்பு அறை மற்றும் வாகன தரிப்பிடம் என்பவற்றில் உடனடி காட்சிகளை பெற்றுக்கொள்ளும் முறைமை(CCTV) நிருமாணிப்பதற்காக ரூபா. ஒரு மில்லியன் தொகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த ஒதுக்கீடுகளை உபயோகப்படுத்தி உரிய பணிகளை நிறைவேற்றப்படாமையால் அந்த பிரிவுகளில் ஏற்படக் கூடிய சட்ட விரோதமான செயற்பாடுகளை கண்காணிக்கும் சந்தர்ப்பம் இல்லாமையால் எதிர் பார்க்கப்பட்ட பெறுபேறுகளை அடைந்துக் கொள்வதற்கு முடியாதிருந்தது.

## 2.2 நிலையான அபிவிருத்தி

-----------------------------

ஐக்கிய நாடுகளின் அமைப்பில் நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பில் 2030 நிகழ்ச்சி நிரல் பிரகாரம் நிலையான அபிவிருத்தி நோக்கங்கள், இலங்கை சுங்கத்தின் கடமைப் பொறுப்புகளுடன் ஒழுங்கமையவில்லையென குறிப்பிடப்பட்டு, இலங்கை சுங்கத்தால் நிலையான அபிவிருத்தி நோக்கங்கள்மீது கவனம் செலுத்தப்பட்டிருந்தது.

## 2.3 பெறுகை நடைமுறைமூலம் வழங்கல் மற்றும் சேவைகள் என்பவற்றை பெற்றுக்கொள்ளுதல்

-------------------------------------------------------------------------------------------

இலங்கை சுங்கம் பொருட்டு ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீடுகளில் ரூபா. 286.98 மில்லியன் தொகையிலான ஒதுக்கீடுகளை உபயோகப்படுத்துவதற்காக அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டல் கோவையில் ஏற்பாடுகளை பின்பற்றப்பட வேண்டியிருந்தது. மீளாய்விற்கான ஆண்டில் ரூபா. 260.9 மில்லியன் ஒதுக்கீடுகளை வாகனங்கள் கொள்வனவு செய்வதற்கு ஏற்பாடு செய்திருந்ததுடன், அந்த ஒதுக்கீடு முற்றுமுழுதாக எஞ்சியிருந்தது. கட்டிடங்களை நிருமாணிப்பதற்காக ஏற்பாடு செய்திருந்த ரூபா. 8.87 மில்லியன் தொகையிலான ஒதுக்கீடுகளிலிருந்து ரூபா.8.87 மில்லியன் தொகையும் அடங்கலாக ரூபா.270.94 மில்லியன் ஒதுக்கீடு உபயோகப்படுத்தப்படவில்லை. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க பெறுகை வழிகாலட்டல் கோவையில் 2.6.1(அ)(ii) மற்றும் (iv) பிரிவுகளின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் பொருட்களுக்கு ஏற்புடையதான விவரக் குறிப்புகளை மீளாய்வு செய்தல் மற்றும் விலை கோரல் கடித ஆவணங்களை மீளாய்வு செய்து அங்கீகரிக்கப்பட வேண்டுமாயினும், ரூபா.3.01 மில்லியன் பெறுமதியான பொலிசெக் பைகளை கொள்வனவு செய்யும் பெறுகை நடைமுறையின்போது, தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் ஏற்புடைய விவரக் குறிப்புகள் மற்றும் விலை கோரல் ஆவணங்களை தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் மீளாய்வு செய்து அனுமதி வழங்கப்படவில்லை.

(ஆ) அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டல் கோவையில் 2.7.5 வழிகாட்டல் பிரகாரம் நிரல் வரிசை அமைச்சின் செயலாளரால் பெறுகை குழு நியமனம் செய்யப்பட

வேண்டுமாயினும், மொத்தம் ரூபா.12.09 மில்லியன் பெறுமதியிலான இரண்டு அலுவல்களின்போது உரியவாறு பெறுகை குழு நியமனம் செய்ததாக உறுதிப்படுத்துவதற்கு ஏற்புடையதான சாட்சிகளை கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டல் கோவையில் 2.8.4 வழிகாட்டல் பிரகாரம் திணைக்களத்து தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களிடத்தில், ஆகக் குறைந்தது ஒரு உறுப்பினர் விடயம் தொடர்பான நிபுணத்துவம் பெற்றவராக இருத்தல் வேண்டுமென்பதுடன், ஒரு உறுப்பினர் நிரல் வரிசை அமைச்சு அல்லது பெறுகை விடயம் தொடர்பாக வெளியக நபராக இருத்தல் வேண்டும். ஆயினும் இரண்டு சந்தர்ப்பங்களில் மொத்தம் ரூபா.19.11 மில்லியன் பெறுமதியிலான இரண்டு பெறுகை தொடர்பில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவை நியமனம் செய்கையில் அதன்படி செயலாற்றப்படவில்லை.

(ஈ) அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டல் கோவையில் 2.11.1 (இ) வழிகாட்டல் பிரகாரம் பெறுகை கால அட்டவணை, பெறுகை முறை மற்றும் விலை கோருதல் ஆவணங்கள் தொடர்பாக இணங்குவதற்காக பெறுகை குழுவினதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினதும் இணைந்த கூட்டம் நடாத்தப்பட வேண்டுமாயினும், ரூபா.3.01 மில்லியன் பொலிசெக் பைகளை கொள்வனவு செய்யும் பெறுகை தொடர்பாக அதன்படி நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

(உ) அரசாங்க பெறுகை வழிகாட்டல் கோவையில் 3.4 கோவை பிரகாரம் திணைக்களத்தின் பெறுகை குழுவிடம் பொருட்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்வதற்கு ரூபா. 10 மில்லியன் தொகைக்கு குறைந்த பெறுகைகளை சந்தை விலை முறையின்கீழ் மேற்கொள்ள முடியுமாக இருந்தது. அந்த எல்லையை கடந்து 04 சந்தர்ப்பங்களில் மொத்தம் ரூபா.19.49 மில்லியன் பெறுமதியிலான பெறுகைகளை திணைக்களத்தின் பெறுகை குழுவால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஊ) அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டல் கோவையில் 4.2.2 (அ) மற்றும் (ஆ) பிரகாரம் பெறுகை ஆரம்பமாதல் தொடக்கம் முடிவடையும் வரை ஒவ்வொரு பெறுகைக்கான நடைமுறைகளினதும் படிநிலைகளை முறையாக விபரிக்கப்படும் பெறுகை கால அட்டவணை தயாரிக்கப்பட வேண்டியிருந்தது. உலோக முத்திரைகள் 600,000 ம் கொள்வனவு செய்வதற்கு பெறுகையின்போது அவ்வாறான கால அட்டவணை தயாரிக்கப்பட்டிருக்- கவில்லை.

(எ) அடுக்கு கட்டில்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா.6.1 மில்லியன் பெறுமதியிலான பெறுகை, அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டல் கோவையில் 6.3.1 வழிகாட்டல் பிரகாரம் மேற்கொள்ளப்படவில்லை.

(எ) 02 சந்தர்ப்பங்களில் மொத்தம் ரூபா.17.38 மில்லியன் பெறுமதியிலான பெறுகை நடவடிக்கைகளின் பொருட்டு, பெறுகை வழிகாட்டல் கோவையில் 8.9.1 (ஆ) வழிகாட்டல் பிரகாரம் முறையான உடன்படிக்கைகளை மேற்கொள்ளப்படவில்லை.

**2.4** சொத்துக்களின் முகாமைத்துவம்

----------------------------------------

இலங்கை சுங்கத்தின் சொத்துக்கள் முகாமைத்துவம் தொடர்பாக மேற்கொண்ட மாதிரி கணக்காய்வு பரிசோதனையில் பின்வரும் குறைப்பாடுகள் வெளிப்படுத்திக் கொள்ளப்பட்டன.

**(அ) சொத்துக்கள் பதிவேட்டிற்குட்படுத்தப்படாமை**

----------------------------------------------------------

சுங்க உதவி அலுவலகத்திடம் வழங்கப்பட்டிருந்த 76 அடுக்கு கட்டில்களில் மொத்தம் ரூபா.2.40 மில்லியன் பெறுமதியிலான 35 அடுக்கு கட்டில்களின் பெறுமதி பதிவேட்டிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) அரசாங்கத்துக்குரிய சொத்துக்களை ஆகக் கூடியதாக வினைத்திறனுடன் பயன்படுத்தாமை**

-----------------------------------------------------------------------------------------------

இலங்கை சுங்கத்திற்குரிய பின்வரும் சொத்துக்களை வினைத்திறனுடன் பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

(i) கொம்பெனி வீதியில் மோகன் தெருவில் அமைந்துள்ள இலங்கை சுங்கத்திற்குரிய இரண்டு வீடுகளை 2017 ஆம் ஆண்டில் ரூபா.604,319 தொகை செலவிடப்பட்டு புனரமைப்பு செய்யப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக அந்த இரண்டு வீடுகளின் பொருட்டு ரூபா.471,000 பெறுமதியான 06 கட்டில்கள் மற்றும் 12 மெத்தைகள் வழங்கப்பட்டிருப்பினும், அந்த இரண்டு வீடுகளும் பயனற்று இருந்தன.

(ii) மோகன் வீதியில் அமைந்துள்ள இலங்கை சுங்கத்திற்கு உரியதான 17 வீடுகளை கொண்டமைந்த இரண்டு வரிசை வீடுகளில், மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் 08 வீடுகள் தவிர்ந்த மீதி எல்லா வீடுகளும் பாதுகாப்பின்றி இருந்தன.

**(இ) சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தாமை**

-----------------------------------------------------------

மோகன் வீதியில் இலங்கை சுங்கத்திற்குரிய நிலப் பகுதியில் இரண்டு நபர்களால் அத்துமீறி சீமெந்து கற்களால் வீடொன்றை கட்டப்பட்டு மின்சாரம் மற்றும் தண்ணீர் வசதி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. குறித்த அத்துமீறல் நபர்களை அகற்றப்பட்டு அரசாங்க சொத்துக்களில் உரிமையை உறுதிப்படுத்துவதற்கு மீளாய்விற்கான ஆண்டு இறுதியிலும் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

**(ஈ) வாகன உபயோகம்**

-------------------------

மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் இலங்கை சுங்கத்திற்குரியதாக 108 வாகனங்கள் இருந்ததுடன், அந்த வாகனங்கள் கிலோ மீற்றர் 1,069,807 தூரத்தினை ஓடியிருந்தன. அதற்காக எரிபொருள் மற்றும் மசகு எண்ணெய், வாகனங்களின் சர்விஸ் மற்றும் பழுதுபார்த்தல் என்பவற்றுக்கு ரூபா. 21.12 மில்லியன் தொகையும், வாகனங்களின் காப்புறுதிக்கு ரூபா. 3.57 மில்லியன் தொகயையும் என்ற வகையில் மொத்தம் ரூபா. 24.69 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன்படி திணைக்களத்தால் பல்வேறு வகையிலான வானங்களை ஓட்டத்தில் விடும் பொருட்டு சாரதி சம்பளம் மற்றும் படிகள் தவிர்ந்த ஒரு கிலோ மீற்றர் பொருட்டு ரூபா. 23.08 செலவிடப்பட்டிருந்தது. இலங்கை சுங்கத்தில் இருந்த ஒதுக்க வாகனங்களில் 104 வாகனங்களின் பொருட்டு நிதி ஒழுங்குவிதி 1646 பிரகாரம் நாளாந்த ஓட்டக்

குறிப்புகள் மற்றும் மாதாந்த சாராம்ச அறிக்கைகள் 2018 ஆம் ஆண்டு யூன் 30 ஆந் திகதியிலும் கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்படவில்லை.

**2.5 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள்**

**ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீட்டு எல்லையை விஞ்சி பொறுப்புகளை மேற்கொள்ளுதல்.**

2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்கு சுற்றறிக்கையில் 02(அ) பந்தி பிரகாரம் ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீடுகளை விஞ்சி பொறுப்புகளை மேற்கொள்ள முடியாவிடினும், அந்த ஏற்பாடுகளுக்கு முரணாக 10 செலவு விடயங்களுக்கு ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீடுகளை உபயோகப்படுத்திய பின்னர் மொத்தம் ரூபா. 1,093 மில்லியன் ஆன மீதியை, ரூபா. 42 மில்லியனால் விஞ்சி ரூபா. 1,135 மில்லியன் பொறுப்புகளை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**2.6 முகாமைத்துவ குறைப்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஏப்ரல் 19 ஆந் திகதிய 03/2017 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை மூலம் எல்லா அரச நிறுவனங்களிலும் பணிற்றொகுதியினரின் வருகை மற்றும் வெளியேறல் நேரம் விரல் அடையாள இயந்திரங்கள்மூலம் பதிவு செய்தல் வேண்டுமாயினும், இலங்கை சுங்கத்தால் அந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை மீளாய்விற்கான ஆண்டு இறுதியிலும் நிறைவேற்றியிருக்கவில்லை.

(ஆ) சுங்க கட்டளைச் சட்டத்தில் 18(02) பிரிவுபடி இலங்கை சுங்கத்திடம் வரி தொகை குறைவாக செலுத்தியிருந்தால், அவ்வாறு குறைவாக செலுத்தப்பட்ட வரி தொகையினை மீள அறவிடுவதற்கும், மேலதிகமாக அறவிடப்பட்டிருந்த வரி தொகையினை மீள செலுத்துவதற்கும் சட்டத்துடனான ஏற்பாடுகள் அளிக்கப்பட்டிருந்தன. ஆயினும், அந்த ஏற்பாடுகளை கவனத்தில் கொண்டு 2016 ஆம் ஆண்டு நவம்பர் 01 ஆந் திகதி தொடக்கம் 2017 ஆம் ஆண்டு யூன் 15 ஆந் திகதி வரை பெறுமதி சேர் வரி மீது மற்றும் பொருளாதார சேவைக் கட்டணங்களாக மொத்தம் ரூபா 320.06 மில்லியன் தொகை குறைவாக அறவிடப்பட்டிருந்தது. அவ்வாறு குறைவாக அறவிடப்பட்டிருந்த வரி தொகை மற்றும் கட்டணங்களை மீள அறவிடுவதற்கு மீளாய்விற்கான ஆண்டு இறுதியிலும் இலங்கை சுங்கம் பணியாற்றியிருக்கவில்லை.

(இ) மீள இறக்குமதி செய்யும் அடிப்படையில் ஏற்றுமதி மெற்கொள்கின்ற சந்தர்ப்பங்களில் இலங்கை சுங்கத்தால் இலவசமாக சான்றிதழ்கள் வழங்கப்படுவதுடன், அவ்வாறு மீள் இறக்குமதி செய்யும் குறிக்கோளுடன் ஏற்றுமதி செய்கின்ற பொருட்கள், துணைக் கருவிகள் அல்லது உதிரிப் பாகங்களை உரியவாறு ஏற்புடைய காலப்பகுதிக்குள் மீள இறக்குமதி செய்யப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துவதற்கான முறைமை இலங்கை சுங்கத்தால் அறிமுகப்படுத்தியிருக்கவில்லை. மீளாய்விற்கான ஆண்டு இறுதியிலும் அவ்வாறான 600 சந்தர்ப்பங்களில் ஏற்றுமதி செய்த பொருட்களில் 167 சந்தர்ப்பங்களில் மட்டும் இறக்குமதி செய்திருந்தமை அவதானிக்கப்பட்டது. இதனடிப்படையில் 433 சந்தர்ப்பங்களில் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களை மீள இறக்குமதி செய்யப்படவில்லையெனிலும், அதற்காக முறையான நடைமுறைகளை மேற்கொள்ளப்படவில்லை.

(ஈ) திணைக்களத்தால் அலுவலர்களின் பொருட்டு உத்தியோகபூர்வ இல்லங்களை வழங்குகையில் தாபன விதிக் கோவையில் XIX அத்தியாயத்தில் 5.4 பிரிவு பிரகாரம் வாழ்க்கைத் துணைவர் அராசங்க ஊழியரா என்பதை உறுதிப்படுத்திய பின்னர் சம்பளத்தில் வாடகை கட்டணம் அறவிடப்பட வேண்டுமாயினும், திணைக்களத்தால் இரண்டு சந்தர்ப்பங்களில் அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(உ) வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் வீடுகளை கையேற்கும்போது சுங்கத் திணைக்களத்திடம் ரூபா. 5.28 மில்லியன் நட்டஈட்டு தொகை வழங்கப்பட்டிருந்தது. அந்த பணத் தொகை அரசாங்க வருமானத்திற்கு வரவு வைக்காது உத்தியோகபூர்வ இல்லங்கள் பற்றி எதுவித தொடர்பும் இல்லாத சுங்க முகாமைத்துவம் மற்றும் நட்டஈட்டு நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஊ) இலங்கை துறைமுக அதிகார சபையால் மேற்கொண்ட பொருட் ஏலவிற்பனையில் இலங்கை சுங்கத்திடம் வழங்கப்பட வேண்டிய உரித்துகள் கூறப்படாத ஏலவிற்பனை பணம், சுங்க திணைக்களத்தின் புத்தகங்கள்படி ரூபா.31.89 மில்லியனாக காணப்பட்டது. ஆயினும், இலங்கை துறைமுக அதிகார சபையின் புத்தகங்கள்படி அந்தப் பெறுமதி ரூபா.218.48 மில்லியனாகியது. அந்தப் பெறுமதிகளை ஒப்பிட்டுப் பார்த்து இலங்கை சுங்கத்திடம் கிடைக்கப்பெற வேண்டிய குறித்த தொகையினை, அடையாளம் காணுவதற்கு இலங்கை சுங்கத்தால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதுடன், கிடைக்கப்பெற வேண்டிய தொகையினை அறவிடுவதற்கு மீளாய்விற்கான ஆண்டு இறுதியிலும் இலங்கை சுங்கத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(எ) இலங்கை சுங்கத்தால் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கைப்பற்றிய 20 கொள்கலன்களை மீளாய்விவிற்கான ஆண்டு இறுதியிலும், துறைமுகத்தின் வலாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. இதன் காரணமாக இலங்கை துறைமுக அதிகார சபைக்கு, கொள்கலன்களை வழிநடாத்துகையில் 10,411 நாட்கள் கொள்கலன்களை நிறுத்தி வைப்பதற்கான இடவசதி கிடைக்கப்பெறவில்லை. அவ்வாறு நீண்ட காலம் கொள்கலன்களை நிறுத்தி வைத்தல் காரணமாக கப்பல் முகவர்களிடமிருந்து துறைமுக அதிகார சபைக்கு அறவிடப்பட வேண்டிய தாமதக் கட்டணம் அறவிடுவதற்கும் முடியாது போயிருந்தது.

## 2.7 கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒதுக்கீடுகளை பயன்படுத்தல்

---

2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டு காலப் பகுதியில் திணைக்களத்திடம் ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீடு, உபயோகம் மற்றும் மீதி தொடர்பான தகவல்கள் பின்வருமாறாகும்.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஒதுக்கீடு | உபயோகம் | மீதி | மீதி தேறிய ஒதுக்கீட்டில் சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| 2013 | மீண்டுவரும் | 1,496.60 | 1,495.58 | 1.02 | 0.07 |
| | மூலதனம் | 776.79 | 775.88 | 0.91 | 0.12 |
| | **மொத்தம்** | **2,273.39** | **2,271.46** | **1.93** | **0.08** |
| 2014 | மீண்டுவரும் | 1,680.68 | 1,659.48 | 21.20 | 1.26 |
| | மூலதனம் | 398.11 | 354.13 | 43.98 | 11.05 |
| | **மொத்தம்** | **2,078.79** | **2,013.61** | **65.18** | **3.14** |
| 2015 | மீண்டுவரும் | 1,870.54 | 1,865.92 | 4.62 | 0.25 |
| | மூலதனம் | 214.60 | 181.00 | 33.60 | 15.66 |
| | **மொத்தம்** | **2,085.14** | **2,046.92** | **38.22** | **1.83** |
| 2016 | மீண்டுவரும் | 1,956.00 | 1,892.73 | 63.27 | 3.23 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மூலதனம் | 100.00 | 87.05 | 12.95 | 12.95 |
| | **மொத்தம்** | **2,056.00** | **1,979.79** | **76.22** | **3.71** |
| 2017 | மீண்டுவரும் | 2,116.40 | 2,083.25 | 33.15 | 1.57 |
| | மூலதனம் | 565.95 | 218.75 | 347.20 | 61.35 |
| | **மொத்தம்** | **2,682.35** | **2,302.00** | **380.35** | **14.18** |

மீளாய்விற்கான ஆண்டுக்காக ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீடுகளில் மீதி தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை சுங்கத்தின் நிவாரணப் பிரிவின்கீழ் உள்ள சமுத்திரப் பிரிவினை மீண்டும் தாபிப்பதற்காக 06 காவல் படகுகளை கொள்வனவு செய்வதற்கு 2017 ஆம் ஆண்டு வரவு செலவு பிரேரணைகளின்மூலம் ரூபா.250 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. ஆயினும், அந்தப் பணிகள் மீளாய்விற்கான ஆண்டு இறுதியிலும் நிறைவேற்றப்படாமையால் ஏற்பாடு செய்திருந்த மூலதன ஒதுக்கீடுகளில; 61.22% ஒதுக்கீடுகள் எஞ்சியிருந்தது.

(ஆ) 03 செலவு விடயங்களின் பொருட்டு ஏற்பாடு செய்திருந்த மொத்தம் ரூபா.261 மில்லியன் ஒதுக்கீடுகள் எதுவித உபயோகம் இன்றி எஞ்சியிருந்தது.

(இ) 8 செலவு விடயங்களின் பொருட்டு மொத்தம் ரூபா. 415 மில்லியன் தொகையிலான மிகை ஒதுக்கீடு ஏற்பாடு செய்திருந்தமை காணரமாக மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் ரூபா. 314 மில்லியன் தொகை மட்டும் உபயோகப்படுத்தப்பட்டிருந்தது. அதனடிப்படையில் ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீடுகளில் 6% தொடக்கம் 63% வரையிலான எல்லைக்குள் ஒதுக்கீடு எஞ்சியிருந்தது.

## 2.8 வருமானக் கணக்கு

### 2.8.1 மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் உண்மையான வருமானம்

இலங்கை சுங்கத்தால் 2017 ஆம் ஆண்டுக்காக 17 வருமான குறியீடுகளின் பொருட்டு மொத்தம் ரூபா. 757,800 மில்லியன் ஆன வருமானம் மதிப்பிடப்பட்டிருந்தது. மீளாய்விற்கான ஆண்டில் அந்த வருமானக் குறியீடுகளின்கீழ் மொத்தம் ரூபா. 728,271 மில்லியன் தொகையிலான வருமானம் சேர்க்கப்பட்டிருந்தது. அது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 96.10% ஆக இருந்தது. விபரங்கள் பின்வருமாறாகும்.

| வருமான குறியீடு | 2017 திசெம்பர் 31 ஆந் திகதி | | | விஞ்சுதல்/ (பற்றாக்குறை) மதிப்பீட்டின் சதவீதமாக | திரட்டிய வருமானம் மதிப்பிடப்பட்ட வருமானத்தில் சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | உண்மையான வருமானம் | விஞ்சுதல்/ (பற்றாக்குறை) | | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | | |
| 10.01.01.00 | 158,000 | 136,501 | (21,499) | (13.61) | 86.39 |
| 10.01.02.00 | 30 | 30 | 0 | 0 | 100.00 |
| 10.01.04.00 | 100,000 | 102,360 | 2,360 | 2.36 | 102.36 |
| 10.01.05.01 | 57,000 | 56,574 | (426) | (0.75) | 99.25 |
| 10.01.05.02 | 3,000 | 2,980 | (20) | (0.67) | 99.33 |
| 10.01.06.00 | - | - | - | - | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10.01.07.00 | - | - | - | - | - |
| 10.01.08.00 | 70,000 | 71,402 | 1,402 | 2.00 | 102.00 |
| 10.01.99.00 | - | - | - | - | - |
| 10.02.05.01 | 86,000 | 85,956 | (44) | (0.05) | 99.95 |
| 10.02.05.02 | 430 | 469 | 39 | 9.07 | 109.07 |
| 10.02.05.03 | 75,000 | 73,983 | (1,017) | (1.36) | 98.64 |
| 10.02.05.04 | 200,000 | 189,740 | (10,260) | (5.13) | 94.87 |
| 10.02.05.05 | - | - | - | - | - |
| 10.02.05.99 | 6,500 | 6,091 | (409) | (6.29) | 93.71 |
| 20.03.02.17 | 140 | 218 | 78 | 55.71 | 155.71 |
| 20.03.03.01 | 1,700 | 1,964 | 264 | 15.53 | 115.53 |

### 2.8.2 நிலுவை வருமானம்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கணக்குப்படி மொத்தம் ரூபா 19,483.85 மில்லியன் தொகையிலான வருமானம் நிலுவையாக இருந்தது. அந்த நிலுவை வருமானம் 2001 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரையிலான காலவெல்லைக்கு ஏற்புடையதாகும். 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017 ஆம் ஆண்டில் நிலுவை வருமானம் ரூபா 1,831.96 மில்லியனால் அல்லது 8.59% ஆல் குறைந்திருந்தது.

(ஆ) பல்வேறு அரசாங்க அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் என்பவற்றிலிருந்து இலங்கை சுங்கத்திடம் தீர்க்கப்பட வேண்டிய நிலுவை வருமானங்களை, அந்த அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் என்பவற்றின் செலவு விடயங்களில் தீர்த்துக்கொள்வதற்கு திருப்திகரமாக பணியாற்றியிருக்கவில்லை. அதனால் பின்வரும் வருமான குறியீடுகளுக்கு ஏற்புடையதாக நிலுவை வருமானம் பல ஆண்டுகளிலான கால வெல்லை தொடக்கம் நிலுவையாக இருந்து வந்துள்ளது.

(i) வருமான வரி குறியீடுகளின்கீழ், கடந்த ஆண்டு இறுதியில் நிலவிய ரூபா. 6,811.71 ஆன மில்லியன் தொகையிலான நிலுவை இறக்குமதி வரி வருமானத்தில் மீளாய்விற்கான ஆண்டில் எதுவித நிலுவை வரி தொகையும் அறவிடப்படவில்லை. அதனை இலங்கை சுங்கத்தின் மொத்த நிலுவை வருமானத்தில் 34.96% அளவாக இருந்தது. அந்த நிலுவை வருமானத்தில் ரூபா. 5,105.22 மில்லியன் அல்லது 74.95 % தொகை 2006 ஆண்டில் தொடக்கம் 2012 ஆம் ஆண்டு தொடக்கம் காலவெல்லைக்குள் நிலுவையாக இருந்து வந்தது.

(ii) மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் துறைமுகம் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி வரியாக ரூபா. 2,606.35 மில்லியன் வருமானம் நிலுவையாக இருந்தது. இது இலங்கை சுங்கத்தின் முழுமொத்த நிலுவை வருமானத்தில் 13.38 % பிரதிநிதித்துவப்படுத்தியது. நிலுவை விமான நிலைய அபிவிருத்தி வரி வருமானத்தில் ரூபா 2,390.07 மில்லியன் அல்லது 92% நிலுவை வருமானம் 2006 ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரையிலான காலவெல்லை தொடக்கம் இருந்து வருகின்றது.

(iii) மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் முழுமொத்த நிலுவை வரி வருமானத்தில் 7.28% அல்லது ரூபா. 1,418.20 மில்லியன் தொகை நிலுவை

இறக்குமதி செஸ் வரி வருமானமாக பிரதிநிதித்துவப்படுத்தியது. 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரையிலான காலவெல்லைக்குள் ரூபா. 1,336.11 மில்லியன் தொகையிலான வருமானம் நிலுவையாக இருந்து வந்தது.

(iv) 2011 ஆம் ஆண்டில் இல்லாதொழிக்கப்பட்ட பிரதேச உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி வரி வருமானத்தில் 2011 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி தொடக்கம் ரூபா. 42.43 மில்லியன் தொகை நிலுவையாக இருந்தது. 2016 ஆம் ஆண்டு மட்டும் அதில் ரூபா. 9.03 மில்லியன் அறவிடப்பட்டிருப்பினும், மீதி நிலுவை தொகையான ரூபா.33.40 மில்லியன் தொகை மீளாய்விற்கான ஆண்டு இறுதியிலும் அறவிட இயலாதிருந்தது. அந்த நிலுவை 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரையிலான காலவெல்லை தொடக்கம் நிலுவையாக இருந்தது.

(v) மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் விசேட வியாபார பொருட் வரியாக ரூபா. 3,598.06 மில்லியன் தொகை வருமானம் நிலுவையாக இருந்தது. அந்த நிலுவை வருமானத்தில் ரூபா. 15.13 மில்லியன் தொகை வருமானம் 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரையிலான காலவெல்லை தொடக்கம் இருந்து வருகின்றது.

(vi) 2016 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியிலும் மது பான வகைகளின் உற்பத்தி வரி வருமானத்திலிருந்து ரூபா.89.26 மில்லியன் தொகை வருமானம் நிலுவையாக உள்ளதென பதிவாகியுள்ளது. ஆயினும், கம்பெனியிலிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா. 29.38 மில்லியன் தொகை பெறுமதியிலான குடிபான உற்பத்திகளின் வரி தொகை, அந்த நிலுவை வருமான வரி அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அந்த நிலுவை வருமானம் மீளாய்விற்கான ஆண்டில் நிலுவை வருமானப் பட்டியலில் உள்ளடக்கியதால் மொத்த நிலுவை வருமானம் ரூபா. 118.64 மில்லியன் வரை அதிகரித்திருந்தது.

(vii) கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்விற்கான ஆண்டில் பெற்றோலியம் உற்பத்தியில் வரி வருமானமாக ரூபா. 1,859.19 மில்லியன் அல்லது 32.57 % ஆல் அதிகரிக்கப்பட்டிருந்தது. அது இலங்கை சுங்கத்தின் முழுமொத்த நிலுவை வரி வருமானத்தில் 19.75% ஆகும்.

(viii) முழுமொத்த நிலுவை வரி வருமானத்தில் 5.37% அல்லது ரூபா. 1,047.63 மில்லியன் தொகை மோட்டார் வாகனங்களின் உற்பத்தி வரி வருமானம் நிலுவையாக இருந்தது. அந்த நிலுவை வருமானத்தில் ரூபா. 240.83 மில்லியன் தொகை 2006 ஆந் திகதி தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதி தொடக்கம் இருந்து வருகின்றது.

### 2.8.3 வருமானம் இழக்கப்படுதல்

---------------------------------

இலங்கை முதலீட்டு சபையின் கீழ் பதிவு செய்யப்பட்ட கம்பெனியால் உள்நாட்டு சந்தைக்கு வழங்கப்படும் ஆடை உற்பத்தி ஒரு அலகிற்கு 2012 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி மீதான சட்டத்தின்கீழ் ரூபா.25 ஆன வரி அறவிட வேண்டியிருந்தது. அந்த வரி செயற்பாடு 2016 ஆம் ஆண்டு நவம்பர் 01 ஆந் திகதி தொடக்கம் 2016 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிமீது (திருத்தம்) வரி சட்டதில் ஒரு அலகிற்கு ரூபா. 75 ஆக திருத்தம் செய்யப்பட்டிருந்தது. ஆயினும் இலங்கை சுங்கத்தால் திணைக்களத்து கட்டளை இலக்கம் 116 இன் கீழ் அந்த ஏற்பாடுகளை 2017 ஆம் ஆண்டு யூன் 14 ஆந் திகதி வரை தாமதப்படுத்தி நடைமுறைப்படுத்தியதால் ரூபா. 166.59 மில்லியன் வருமானம் அரசாங்கத்திற்கு இல்லாது போயிருந்தது.

### 2.8.4 வருமானம் கைவிடல்

அபராதப் பணம் மற்றும் பறிமுதலுக்கு ஏற்புடையதாக வருமான குறியீடுகளின்கீழ் மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் மொத்தம் ரூபா. 570.10 மில்லியன் தொகையிலான நிலுவை வருமானம், வருமானக் கணக்குமூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

### 2.8.5 வருமானம் சேர்ப்பதன் செயலாற்றுகை

2017 ஆம் ஆண்டு வரவு செலவு மதிப்பீடு படி இலங்கை சுங்கத்தின் வருமானம் சேர்க்கும் முன்னேற்றம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்விற்கான ஆண்டில் இலங்கை சுங்கத்தால் 17 வருமான குறியீடுகளின்கீழ் ரூபா 728,271 மில்லியன் தொகை வருமானம் திரட்டப்பட்டிருந்தது. கடந்த ஆண்டில் வருமான குறியீடு 13 இன் கீழ் ரூபா. 699,872 மில்லியன் ஆன வருமானம் திரட்டப்பட்டிருந்ததுடன், கடந்த ஆண்டுன் ஒப்பிடுகையில் மீளாய்விற்கான ஆண்டின் வருமானம் ரூபா. 28,399 மில்லியன் அல்லது 4.06% ஆல் அதிகரிக்கப்பட்டிருந்தது. மதுபான உற்பத்தி வரி, ஏனைய உற்பத்தி வரி, பெற்றோலிய உற்பத்தி வரி, ஆடை தொழில் உற்பத்தி வரி, விற்பனை மீதான வரி கட்டணங்கள் மற்றும் விசேட வியாபார பொருட்கள் மீதான வரி என்ற வருமான குறியீடுகளின்கீழ் வருமானம் அதிகரித்தல், கடந்த ஆண்டில் திரட்டிய வருமானத்திலும் பார்க்க அதிகமாக வருமானம் திரட்டுவதன்மீது தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

(ஆ) இலங்கை சுங்கத்தால் பின்வரும் 4 வருமான குறியீடுகள்மூலம் மொத்தம் ரூபா. 275,000 ஆன மில்லியன் வருமானம் திரட்டுவதை எதிர்பார்த்து வருடாந்த வரவு செலவு மதிப்பீடுகளை தயாரிக்கப்பட்டிருந்தது. ஆயினும் மீளாய்விற்கான ஆண்டில் ஆரம்பத்தில் மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 381,500 மில்லியனாக திருத்தம் செய்யப்பட்டிருந்தது. மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் அந்த வருமான குறியீடுகளின் மொத்தம் ரூபா. 341,126 மில்லியன் தொகை வருமானமாக திரட்டப்பட்டிருந்தது. அதன்படி இலங்கை சுங்கத்தால் சரியான வருமானத் தொகை மதிப்பீடு செய்யாமையால் வருடாந்த வரவு செலவு மதிப்பீடுகளில் ரூபா. 66,126 மில்லியன் குறைவாக காட்டப்பட்டிருந்தது. இவ்வாறு வருமானம் குறைவாக குறிப்பிடப்பட்டு வருடாந்த வரவு செலவு திட்டம் தயாரிக்கப்பட்டமையால் மதிப்பிடப்பட்ட வரவுசெலவு நிலுவை அந்த அளவில் அதிகரித்திருந்தது. விபரங்கள் பின்வருமாறாகும்.

| வருமான குறியீடு | ஆரம்ப மதிப்பீடுபடி வருமானம் | திருத்தம் செய்யப்பட்ட வருமான மதிப்பீடு | திரட்டிய வருமானம் | மதிப்பிடப்பட்ட வரவு செலவு பற்றாக்குறை குறைத்துக்கொள்ள முடியுமான அளவு |
|---|---|---|---|---|
| | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| விசேட வியாபார பொருட்களின் வரி | 65,000 | 70,000 | 71,402 | 6,402 |
| ஏனைய உற்பத்திகளின் வரி | 5,000 | 6,500 | 6,091 | 1,091 |

| | | | | |
|---|---|---|---|---|
| கனிம வளங்களின் உற்பத்தி வரி | 55,000 | 75,000 | 73,893 | 18,893 |
| மோட்டார் வாகனங்களின் உற்பத்தி வரி | 150,000 | 230,000 | 189,740 | 39,740 |
| | ---------- | ---------- | ---------- | ---------- |
| மொத்தம் | 275,000 | 381,500 | 341,126 | 66,126 |
| | ======= | ======= | ====== | ====== |

**2.9 அரசாங்க அலுவலர்களின் முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

இலங்கை சுங்கத்தால் ஏற்புடைய விடய இலக்கம் 24701 இன் கீழ் அரசாங்க உத்தியோகத்தருக்கு முற்பணக் கணக்கு பொருட்டு பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உண்மையான பெறுமதிகள் பின்வருமாறாகும்.

| **செலவினம்** | | **கிடைக்கப்பெறல்** | | **பற்று மீதி** | |
|---|---|---|---|---|---|
| **ஆகக்கூடிய எல்லை** | **உண்மையான** | **ஆகக் குறைந் எல்லை** | **உண்மையான** | **ஆகக்கூடிய எல்லை** | **உண்மையான** |
| ரூபா.மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா மில்லியன் |
| 50.00 | 49.84 | 42.00 | 43.04 | 310.00 | 198.34 |

இது தொடரப்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) நிலுவை கடன் மீதி அறவிடப்படாமை**

கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்பட்ட கணக்கிணக்க கூற்று பிரகாரம் மீளாய்விறாகான ஆண்டு இறுதியில் அறவிடுதல்களின் நிலுவையாக இருந்த மீதிகளின் மொத்தம் இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன்மீதி தவிர்ந்த ரூபா. 5.23 மில்லியனாக இருந்தது. அந்த நிலுவை கடன் மீதி ஓராண்டு தொடக்கம் நான்கு ஆண்டு வரையிலான காலப்பகுதி வரை இருந்து வந்த போதிலும் அந்த நிலுவை அறவிடுவதற்கு இலங்கை சுங்கம் தவறியிருந்தது.

**(ஆ) இணக்கமின்மை**

மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் ஒற்றை மீதி வகைப்படுத்தல் சாரம்சத்தில் மொத்தம் ரூபா.201,449,097 ஆக இருந்தது. கட்டுப்பாட்டு கணக்குபடி அந்த மீதி ரூபா.201,512,106 ஆகியிருந்ததுடன், அன்றைய திகதியில் ரூபா.63,009 ஆன வேறுபாடு காணப்பட்டது.

**2.10 கட்டுநிதி கணக்கு**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் திணைக்களத்து புத்தகங்கள் மற்றும் திறைசேரி கணினி அச்சீடுகள்படி மீதியில் ரூபா.1.11 மில்லியன் தொகையிலான வேறுபாடு நிலவியது.

**2.11 பொது வைப்புக் கணக்கு**

நியதிச் சட்ட முறையிலான கொடுப்பனவுகளின் பொருட்டு பேணிச் செல்கின்ற தற்காலிக வைப்புக் கணக்கில் ஆரம்ப மீதி ரூபா. 10,829.62 மில்லியனாகியது. அந்த காலத்திற்கு ஏற்புடையதான உப பேரேடினை கணக்குகளுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் கண்காய்விடம் சமர்ப்பிக்கப்பட்ட கணக்கிற்கு ஏற்புடையதான இறுதி மீதி திறைசேரி புத்தகங்கள் மற்றும் திணைக்களத்து புத்தகங்கள் என்பவற்றுக்கிடையில் ரூபா. 46.94 மில்லியன் தொகையிலான வேறுபாடு காணப்பட்டது.

**2.12 கேள்வி வைப்புக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கேள்வி வைப்புக் கணக்கில் 2017 ஆம் ஆண்டு சனவரி 01 ஆந் திகதியில் மீதி திறைசேரி புத்தகங்களின்படி ரூபா. 135.92 மில்லியன் ஆக காணப்பட்டது. திணைக்களத்து புத்தகங்கள்படி அந்த மீதியை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு எதுவித தகவல்களும் கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) திறைசேரி அச்சீடுகளின்படி கேள்வி வைப்புக் கணக்கில் ஆண்டுக்குள் கிடைக்கப்பெறுவனவைகளின் மொத்தம் ரூபா.73.41 மில்லியன் தொகையும், மாதாந்த கணக்கீட்டு சாராம்சம்படி ரூபா.73.07 மில்லியன் தொகையும், சமர்ப்பிக்கப்பட்ட கணக்குப்படி ரூபா.71.70 மில்லியன் தொகையும் மற்றும் வைப்பு பேரேடின்படி ரூபா.71.78 மில்லியன் தொகையும் என்ற வகையில் பதிவு செய்யப்பட்டிருந்தது. இந்த வேறுபாடுகள் தொடர்பாக ஒப்பீடுகள் மேற்கொண்டிருக்கவில்லை.

(இ) திறைசேரி கணினி அச்சீடுகளின்படி கேள்வி வைப்புகள் கணக்கில் ஆண்டுக்குள் கொடுப்பனவுளின் மொத்தம் ரூபா.129.08 மில்லியன் தொகையும், சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின்படி அது ரூபா.127.48 மில்லியன் தொகையும் பேரேடின்படி ரூபா.60.65 மில்லியன் தொகையும் என்று பதிவாகியிருந்தது. இந்த வேறுபாடுகளை ஒப்பிட்டு சரியான பெறுமதி கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் செலுத்துவதற்காக சமர்ப்பிக்கப்படாத 02 ஆண்டுகள் விஞ்சிய மொத்தம் ரூபா. 37.31 மில்லியன் தொகையிலான கேள்வி வைப்புகள் தொடர்பில் நிதி ஒழுங்குவிதி 570 பிரகாரம், முறையான ஒழுக்காற்று விசாரணையின் பின்னர் அரச வருமானத்திற்கு எடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

**2.13 விமானங்கள் மூலம் கொண்டு வரப்படும் பொருட்களுக்கு அறவிடப்படும் வைப்புக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விமானங்கள் மூலம் கொண்டு வரப்படும் பொருட்களுக்கு அறவிடப்படும் விசேட வைப்புக் கணக்கில் ஆரம்ப மீதி மற்றும் இறுதி மீதி ஒழுங்கு முறையாக ரூபா.7.16 மில்லியன் தொகையும், ரூபா. 8.65 மில்லியன் தொகையும் என்ற வகையில் அதற்கான விபரமான உப ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கணக்கிற்கு ஏற்புடையதாக கிடைக்கப்பெற்றிருந்த மொத்தம் ரூபா.194,612 ஆன தொகை கணக்கீட்டுப் பிரிவில் பேணப்பட்ட வைப்புகள் பேரேடில் குறிப்பு வைக்கப்படவில்லை. ஆயினும் விமான நிலைய வைப்புகளின் பதிவேடுபடி அந்த பணத் தொகையினை வைப்புச் செய்த திகதியிலயே மீண்டும் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) நிதி ஒழுங்குவிதி 206 பிரகாரம் வைப்புகளின் தொகையினை மீள பெறுகையில் உரிய ரிக்விஷன் பத்திரத்தில் இரண்டு பதிவிநலை அலுவலர்களால் கையொப்பமிடப்பட வேண்டுமாயினும், 12 சந்தர்ப்பங்களில் மொத்தம் ரூபா.726,139 தொகை பிரதி சுங்க பணிப்பாளரின் கையொப்பத்தில் மட்டும் விடுவிக்கப்பட்டிருந்தது. அந்த வைப்புகளை விடுவிக்கப்பட்ட திகதியும் வைப்பு பதிவேட்டில் குறிப்பிடப்படவில்லை.

(ஈ) 24 சந்தர்ப்பங்களில் மொத்தம் ரூபா. 2.26 மில்லியன் வைப்புகளை விடுவிக்கும்போது இரண்டு பதவிநிலை அலுவலர்களால் சான்றுப்படுத்திய ரிக்விஷன் பத்திரமின்றி வைப்புக் கணக்கிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தது. அந்த வைப்புகளை விடுவிக்கப்பட்ட திகதியும் வைப்பு பதிவேட்டில் குறிப்பிடப்படவில்லை.

## 2.14 கைப்பற்றிய மற்றும் பறிமுதல் செய்யப்படும் பொருட்கள் தொடர்பான செலவு முற்பணக் கணக்கு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2001 ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை 1,533 சந்தர்ப்பங்களில் வழங்கியிருந்த ரூபா. 24.97 மில்லியன் தொகையிலான முற்பணம் மீளாய்விற்கான ஆண்டு இறுதியிலும் தீர்க்கப்படவில்லை. அந்த மீதிகளை உறுதிப்படுத்தவதற்காக ஆவணங்களையும் கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்படுவதற்கு தவறியிருந்தது.

(ஆ) 17 புலனாய்வு சந்தர்ப்பங்களில் வழங்கியிருந்த மொத்தம் ரூபா. 771,356 தொகையிலான முற்பணம், அந்த புலனாய்வு நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டு அன்பனிப்பு தொகை செலுத்தியிருப்பினும், வழங்கியிருந்த முற்பணம் மீளாய்விற்ான ஆண்டு இறுதியிலும் தீர்க்கப்படவில்லை.

(இ) 07 புலனாய்வு சந்தர்ப்பங்களில் வழங்கியிருந்த ரூபா.726,585 ஆன முற்பணம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியிலும், அதில் ரூபா.261,345 மட்டும் தீர்க்கப்பட்டிருந்தது.

## 2.15 கட்டுநிதி மீதியை தீர்க்கும் தாமதம்.

இலங்கை சுங்கத்தால் 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 29 ஆந் திகதி 24 மணித்தியாலத்தில் பணப் பேரேடுகளை சமப்படுத்தி மூடப்பட்டதாக குறிப்பிடப்படினும், அன்றைய திகதியில் நிலவிய ரூபா. 1.11 மில்லியன் மீதி 2018 ஆம் ஆண்டு சனவரி 16 அந் திகதி திறைசேரியிடம் அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 2.16 வங்கி கணக்குகளை வழிநடாத்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் தயாரிக்கப்பட்டிருந்த வங்கி கணக்கிணக்க கூற்றுபடி கிடைக்கப்பெறாத வைப்புகளாக மொத்தம் ரூபா. 7.48 மில்லியன் காட்டப்பட்டிருந்தது. அந்த வைப்புகளில் ரூபா.4.17 மில்லியன் தொகையிலான வைப்புகள் 06 ஆண்டு காலப் பகுதியிலிருந்து இருந்த வந்த போதிலும், அந்த வைப்பு தொடர்பில் நிதி ஒழுங்குவிதி 189 மற்றும் 486 பிரகாரம் மீளாய்விற்கான ஆண்டு இறுதியிலும் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

(ஆ) 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் தயாரிக்கப்பட்டிருந்த வங்கி கணக்கிணக்க கூற்றின்படி மொத்தம் ரூபா 166,662 ஐ அடையாளம் காணப்படாத கொடுப்பனவாக காட்டப்பட்டிருந்ததுடன், அந்த கொடுப்பனவுகளில் 2015 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதான மொத்தம் ரூபா. 151,824 ஆன 02 மீதிகள் உள்ளடக்கப்பட்டிருந்தன. அந்த கொடுப்பனவுகளை அடையாளம் காணப்பட்டு சீராக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

## 2.17 ஆவணங்கள் மற்றும் புத்தகங்கள் பேணிச் செல்லாமை

திணைக்களத்தால் பின்வரும் ஆவணங்கள் பேணிச் செல்லப்படவில்லை என்பதுடன், மேலும் ஆவணமொன்று முறையாகவும் இற்றைப்படுத்தியும் பேணிச் செல்லாமை அவதானிக்க்பபட்டது.

| ஆவண வகை | சம்பந்தப்பட்ட ஒழுங்குவிதி | அவதானிப்பு |
|---|---|---|
| சேதங்கள் தொடர்பான ஆவணம் | நிதி ஒழுங்குவிதி 110 | பேணவில்லை. |
| நிலையான சொத்துக்களின் பதிவேடு | 1978 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | இற்றைப்படுத்தி பேணியிருக்கவில்லை. |

## 2.18 கணக்காய்விற்கான சாட்சிகள் இல்லாமை

நிதி ஒழுங்குவிதி 272(2) பிரகாரம் அலுவல்களை முடிவுறுத்தப்படாத ரூபா.861,986 பெறுமதியிலான 08 வவுச்சர்கள் காணமால் போயிருந்தன.

## 2.19 இணங்காமை

### 2.19.1 சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழங்குவிதிகள் என்பவற்றுடன் இணங்காமை

மாதிரி கணக்காய்வு விசாரணைகளில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு குறிப்பிடலாம்.

| சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளின் தொடர் | பெறுமதி<br>ரூபா | இணங்காமை |
|---|---|---|
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவை** | | |
| (i) XIX அத்தியாயத்தில் 6.1 பிரிவு | - | உத்தியோகபூர்வ இல்லத்தில் குடியிருக்கும் காலம் 05 ஆண்டுகள் என்று வரையறுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) XIX அத்தியாயத்தில் 6.1(ஆ) பிரிவு | 586,500 | இரண்டு உத்தியோகத்தர்களால் ஏற்பாடுகளுக்கு முரணாக மாதாந்த வீட்டு வாடகை அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. |
| **(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதி** | | |
| (iv) நிதி ஒழுங்குவிதி 565 (1) 4 | 10,829,621,083 | வைப்பு பேரேடுகளில் ஆரம்ப மீதி குறிப்பிடப்படவில்லை. |
| (vi) நிதி ஒழுங்குவிதி 565 (5) | | ஒவ்வொரு ஆண்டுக்கும் பொது 71 படிவத்தில் தயாரிக்கப்பட்ட மாதாந்த வைப்பு சாராம்ச கூற்று அடுத்த |

| | |
|---|---|
| | மாதத்தில் முடிவடைவதற்கு மன்னர் கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லை. |
| (இ) **அரசாங்க நிருவாக சற்றறிக்கை**<br>-----------------------------------<br>2017 ஏப்ரல் 19 ஆந் திகதிய 03/2017 ஆம் இலக்க சுற்றறிக்கை | எல்லா அரச நிறுவனங்களிலும் பணிற்றொகுதியின் வருகை மற்றும் வெளியேறல் குறிப்பிடுவதற்காக விரல் அடையாள இயந்திரம் பயன்படுத்த வேண்டுமாயினும் இலங்கை சுங்கத்தால் அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படாமை |
| (ஈ) **அரச கணக்கு சுற்றறிக்கை**<br>---------------------------------<br>2010 ஆம் ஆண்டு யூலை மாதம்2,003,201 123 ஆந் திகதிய 209/2010 ஆம் இலக்க அரச கணக்கு சுற்றறிக்கை 4.2 மற்றும் 4.3 (2) பந்தி பிரகாரம் | சுற்றறிக்கை பிரகாரம், 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் திணைக்களத்து புத்தகங்களின்படி வைப்பு மீதி மற்றும் திறைசேரி அச்சீட்டு குறிப்புகளின்படி வைப்பு மீதி என்பவற்றுக்கிடையில் ரூபா.2.00 மில்லியன் தொகையிலான வேறுபாடு அடையாளம் காணப்படினும், அந்த வேறுபாட்டினை ஒப்பிட்டு செவ்வையாக்குவதற்கு 2018 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதியிலும் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. |
| (உ) **ஏனைய சுற்றறிக்கைகள்**<br>-----------------------------<br>திணைக்களத்து சுற்றறிக்கை (DOPL) இலக்கம் 696 | (i) தற்காலிகமாக இந்த நாட்டுக்கு கொண்டு வரப்படும் பொருட்களுக்கான தீர்வை வரி மற்றும் ஏனைய வரிகளின் அளவினை பொருட்களின் இரசீது/ மதிப்பீட்டு பெறுமதிபடி சுங்க மேற்பார்வை உத்தியோகத்தரால் தீர்மானிக்கப்பட்டு அந்த வரி அளவிற்கு சமமான பெறுமதியினை வைப்புகளாக நிறுத்தி வைக்க வேண்டுமாயினும், அந்த ஏற்பாடுகளுக்கு முரணாக சில சந்தரப்பங்களில் உரிய வரி பெறுமதிக்கு மேலதிகமாக 10% ஆன மேலதிக தொகை வைப்புகளாக நிறுத்தி |

வைக்கப்பட்டிருந்தது.

(ii) இந்த நாட்டுக்கு வருகை தருகின்ற பயணிகளால் மேற்கொள்கின்ற பண வைப்புகள் மற்றும் அவற்றை மீள செலுத்தல் தொடர்பாக பிரிதொரு பதிவேடு இற்றைப்படுத்த வேண்டுமென குறிப்பிடப்பட்டிருப்பினும், அது தொடர்பாக பிரிதாக பேரேடு இற்றைப்படுத்தப்படவில்லை.

## 2.19.2 வரி தேவைகளுக்கு இணங்கியொழுகாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டணங்களின் திருத்தச் சட்டம்படி 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆந் திகதி தொடக்கம் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களில் 0.5% ஆன பொருளாதார சேவைக் கட்டணம் அறவிட வேண்டியிருந்தது. மேற்படி சேவைக் கட்டணங்கள் அறவிடுமாறு அரச நிதி கொள்கை திணைக்களத்தால் இலங்கை சுங்கத்திடம் 2017 ஆம் ஆண்டு யூன் 15 ஆந் திகதி அறிவிக்கப்பட்டிருந்தது. அதனடிப்படையில் 76 நாட்களிலான கால தாமதத்தின் பின்னர் 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆந் திகதி தொடக்கம் 2017 ஆம் ஆண்டு யூன் 15 அந் திகதி வரையிலான காலப்பகுதியில் இறக்குமதி செய்திருந்த 17,142 வாகனங்களில் ரூபா 153.48 மில்லியன் தொகையிலான வரி வருமானம் இல்லாது போயிருந்தது.

(ஆ) சுங்க ஒருங்கிணைந்த வகையீட்டு இலக்கம் 8703.22.69 இன் கீழ் இறக்குமதி செய்யப்பட வேண்டிய 03 ஆண்டுகளுக்கு பழைமை வாய்ந்த Mazda RX8 பெற்றோல் மோட்டார் வண்டி (1300 CC) 33 ஐ சுங்க ஒருங்கிணைந்த வகையீட்டு 8703.90.99 இலக்கத்தின்கீழ் இறக்குமதி செய்வதன் காரணமாக ரூபா. 114.6 மில்லியன் சுங்க வரி இல்லாது போயிருந்தது.

## 2.20 வள முகாமைத்துவம்

### இணைக்கப்பட்ட பணியாற்தொகுதி, உண்மையான பணியாற்தொகுதி மற்றும் ஆளுக்குரிய வேதனாதிகளுக்கான செலவு

2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் அங்கீகரிக்ப்பட்ட, உண்யைமான மற்றும் வெற்றிடப் பதவியணி தொடர்பான விபரங்கள் பின் குறிப்பிடப்படுகின்றன. மீளாய்விற்கான ஆண்டின் பொருட்டு திணைக்களத்தால் ஆளுக்குரிய வேதனாதிகளின் செலவு தொகுதி பொருட்டு ரூபா. 1,348 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன்படி ஆளுக்குரிய வேதனாதிகள் ரூபா. 307,642 ஆகும்.

| | ஊழியர் வகுதி | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் எண்ணிக்கை | உண்மையான பதவியணியின் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேட்ட மட்டம் | 329 | 296 | 33 |
| (ii) | மூன்றாம் நிலை மட்டம் | 1152 | 777 | 375 |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | இரண்டாம் நிலை மட்டம் | 987 | 696 | 291 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 505 | 422 | 83 |
| (v) | அமய/ஒப்பந்தம் | 2973 | 2191 | 782 |
| | | -------- | -------- | ------- |
| | மொத்தம் | 5946 | 4382 | 1564 |
| | | ==== | ==== | ===== |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இறக்குமதி செய்கின்ற பொருட்கள்மூலம் அரசாங்கத்தின் வருமானம் கவனிக்கத்தக்க பங்களிப்பு வழங்கியபோதும், இலங்கை சுங்கத்தால் இறக்குமதி பொருட்கள் உள்ளடக்கிய கொள்கலன்களை பரிசோதனை செய்யும் நடவடிக்கைகளை முறையாகவும் போதியளவிலும் மேற்கொள்வதற்கு போதுமான உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தியிருக்கவில்லை.

(ஆ) இலங்கை சுங்கத்தால் ஒவ்வொரு பிரிவிடமும் இணைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல் பதிவேட்டினை, மனிதவள முகாமைத்துவப் பிரிவால் அல்லது நிருவாகப் பிரிவால் இற்றைப்படுத்தியிருக்கவில்லை. அதன்படி அந்தந்த பிரிவுகளில் தேவைகளுக்கு ஏற்புடையதாகும் வகையில் உத்தியோகத்தர்களை இணைக்கப்பட்டிருந்தமையை உறுதிப்படுத்துவதற்கு போதியளவு சாட்சிகள் கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்படவில்லை.